جمعية الـدعوة والإرشـاد
وتوعية الجاليـات بالخبـر

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

مَنْ أَحَبَّ لِقَاءَ اللَّهِ أَحَبَّ اللَّهُ لِقَاءَهُ،
وَمَنْ كَرِهَ لِقَاءَ اللَّهِ كَرِهَ اللَّهُ لِقَاءَهُ

புகாரி 6508

அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

1

## அல்லாஹ்வை தரிசிப்பதை விரும்புபவர்களுக்கு உரிய நற்செய்தி

நபி (ﷺ) அவர்கள் கூறினார்கள்.

’எவர் அல்லாஹ்வை தரிசிக்க விரும்புகின்றாரோ அவரைச் சந்திக்க அல்லாஹ்வும் விரும்புகின்றான்.

எவர் அல்லாஹ்வை தரிசிப்பதை வெறுக்கின்றாரோ அவரைச் சந்திப்பதை அல்லாஹ்வும் வெறுக்கின்றான்.’

அறிவிப்பாளர்: அபூமூஸா (ரலி) அவர்கள், புகாரி 6508

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

2-A

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## அல்லாஹ்வை தரிசிப்பதை விரும்புபவருக்கு அல்லாஹ் வழங்கும் உபதேசம்

எவன் தன்னுடைய இறைவனைச் சந்திக்கலாமென ஆதரவு வைக்கின்றானோ அவன் (ஸாலிஹான) நல்ல செயல்களைச் செய்து, தன் இறைவனை வணங்குவதில் வேறெவரையும் இணையாக்காதும் இருப்பானாக!"

அல்குர்ஆன் 18: 110

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

2-B

## அல்லாஹ்வை தரிசிப்பதை விரும்புபவருக்கு அல்லாஹ் வழங்கும் உபதேசம்

’எவர் அல்லாஹ்வைச் சந்திப்போம் என்று நம்புகிறார்களோ அவர்கள் (அதற்காக நல்ல அமல்களைச் செய்து கொள்ளட்டும்) ஏனெனில் அல்லாஹ் (அதற்காகக் குறித்துள்ள) தவணை நிச்சயமாக வருவதாக இருக்கிறது. அவன் (யாவற்றையும்) செவியேற்பவனாகவும், நன்கு அறிபவனாகவும் இருக்கின்றான்.’

அல்குர்ஆன் 29:5

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

3

## அல்லாஹ்வை தரிசிப்பதை உறுதியாக நம்புபவர்கள் பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் அல்லாஹ்விடம் உதவி தேடுவார்கள்

மேலும் பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். எனினும், நிச்சயமாக இது உள்ளச்சம் உடையோர்க்கு அன்றி மற்றவர்களுக்குப் பெரும் பாரமாகவேயிருக்கும்.

(உள்ளச்சமுடைய) அவர்கள்தாம், "திடமாக (தாம்) தங்கள் இறைவனைச் சந்திப்போம், நிச்சயமாக அவனிடமே தாம் திரும்பச்செல்வோம்" என்பதை உறுதியாகக் கருத்தில் கொண்டோராவார்'.

அல்குர்ஆன் 2: 45,46.

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

4

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## அல்லாஹ்வை தரிசிப்பதை உறுதியாக நம்புபவர்களுக்குக் கிடைக்கும் இறை உதவி

'நாம் நிச்சயமாக அல்லாஹ்வைச் சந்திப்போம் என்று உறுதி கொண்டிருந்தோர், "எத்தனையோ சிறு கூட்டத்தார்கள், பெருங் கூட்டத்தாரை அல்லாஹ்வின் (அருள் மிக்க) அனுமதி கொண்டு வென்றிருக்கின்றார்கள், மேலும் அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்" என்று கூறினார்கள்.

அல்குர்ஆன் 2: 249.

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

5

جمعية الدعوة والإرشاد وتوعية الجاليات بالخبر

## அல்லாஹ்வின் தரிசனத்தை நம்பியவர்களுக்கு நற்செய்தி

அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள், (மறுமையில்) அவனைச் சந்திக்க வேண்டும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். நம்பிக்கை கொண்டவர்களுக்கு நற்செய்தி கூறுவீராக!

அல்குர்ஆன் 2: 223

ஜம்இய்யத்துத் தஃவா வல் இர்ஷாத் (logo)

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

6

## படைத்த இறைவனின் சந்திப்பை மறுப்பவர்களின் நிலை

அறிந்து கொள்க! நிச்சயமாக அவர்கள் தங்கள் இறைவனைச் சந்திப்பது குறித்துச் சந்தேகத்தில் இருக்கிறார்கள். அறிந்து கொள்க ! நிச்சயமாக அவன் எல்லாப் பொருட்களையும் சூழ்ந்து (அறிந்தவனாக) இருக்கிறான்.

அல்குர்ஆன் 41 : 54

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

7-A

## பெரும் நஷ்டம் அடைந்தவர்கள்

ஆகவே, (மறுமை நாளில்)
அல்லாஹ்வைச் சந்திப்பதைப் பொய்
என்று கூறியவர்கள் நிச்சயமாக
நஷ்டம் அடைந்தவர்களாகி விட்டனர்'

அல்குர்ஆன் 6 : 31

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

7-B

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

## பெரும் நஷ்டம் அடைந்தவர்கள்

அல்லாஹ்வின் சந்திப்பைப் பொய்ப்படுத்தியவர்கள் நிச்சயமாக நஷ்டம் அடைந்து விட்டார்கள், மேலும் அவர்கள் நேர்வழி பெற்றிருக்கவில்லை.

அல்குர்ஆன் 10 : 45

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

8

## அனைத்து நன்மைகளையும் இழந்தவர்கள்

எவர்கள் நம் வசனங்களையும், (அத்தாட்சிகளையும்) மறுமையில் (நம்மைச்) சந்திப்பதையும் பொய்யெனக் கூறுகின்றார்களோ அவர்களுடைய நற்கருமங்கள் யாவும் அழிந்துவிடும், அவர்கள் எவ்வாறு செயல்பட்டார்களோ அதற்குத் தகுந்த கூலியைத் தவிர வேறு எதைப் பெற முடியும்?

அல்குர்ஆன் 7:147

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

9

## இறைவனிடம் எந்த மதிப்பும் அற்றவர்கள்

அவர்கள் தங்களுடைய இறைவனின் வசனங்களையும், அவனை (மறுமையில்) சந்திப்போம் என்பதையும் நிராகரிக்கிறார்கள், அவர்களுடைய செயல்கள் யாவும் வீணாகும், மறுமை நாளில் அவர்களுக்காக எந்த மதிப்பையும் நாம் ஏற்படுத்த மாட்டோம்.

அல்குர்ஆன் 18 : 105

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

10

## நரகத்தையே பரிசாகப் பெறுபவர்கள்

நிச்சயமாக எவர்கள் நம்மைச் சந்திப்பதை(ச் சிறிதும்) நம்பாது, இவ்வுலக வாழ்க்கையை (மிகவும்) விரும்பி, அதில் திருப்தியடைந்து கொண்டும் இன்னும் எவர்கள் நம் வசனங்களைப் புறக்கணித்துக் கொண்டும் இருக்கிறார்களோ –அவர்கள் சம்பாதித்த (தீமைகளின்) காரணமாக அவர்கள் தங்குமிடம் நரகம் தான்.

அல்குர்ஆன் 10 : 7

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

11

## வழிகேட்டிலேயே தட்டழிந்தவர்கள்

எனினும் நம் சந்திப்பை(ச் சிறிதும்) நம்பாதவர்களை, அவர்களுடைய வழிகேட்டிலேயே தட்டழிந்து அலையுமாறு (சிறிது காலம் இம்மையில்) நாம் விட்டு வைக்கிறோம்.

அல்குர்ஆன் 10 : 11

# அழகிய வேதமாகிய அல்குர்ஆனையே மாற்றுமாறு கூறுபவர்கள்

அவர்கள் மீது தெளிவான நம் வசனங்கள் ஓதிக் காண்பிக்கப்பட்டால், நம்முடைய சந்திப்பை நம்பாதவர்கள், "இது அல்லாத வேறு ஒரு குர்ஆனை நீர் கொண்டு வாரும், அல்லது இதை மாற்றிவிடும்" என்று கூறுகிறார்கள். அதற்கு "என் மனப் போக்கின்படி அதை நாம் மாற்றிவிட எனக்கு உரிமையில்லை, என் மீது வஹீயாக அறிவிக்கப்படுபவற்றைத் தவிர வேறெதையும் நான் பின்பற்றுவதில்லை, என் இறைவனுக்கு நான் மாறு செய்தால், மகத்தான நாளின் வேதனைக்கு (நான் ஆளாக வேண்டும் என்பதை) நான் நிச்சயமாக பயப்படுகிறேன்" என்று (நபியே!) நீர் கூறுவீராக.

அல்குர்ஆன் 10 : 15

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

13

## பெருமையின் காரணமாக சத்தியத்தை ஏற்க மறுப்பவர்கள்

’மேலும் (மறுமையில்) நம் சந்திப்பை நம்பாது இருக்கிறார்களே அவர்கள்: “எங்களிடம் ஏன் மலக்குகள் அனுப்பப்படவில்லை? அல்லது ஏன் நாம் நம்முடைய இறைவனைக் காண முடியவில்லை?” என்று கூறுகிறார்கள். திடமாக அவர்கள் பெருமையடித்துக் கொண்டிருக்கிறார்கள், மேலும், மிகவும் வரம்பு கடந்து சென்று விட்டனர்.

அவர்கள் மலக்குகளைக் காணும் நாளில், அக்குற்றவாளிகளுக்கு நற்செய்தி எதுவும் அன்றைய தினம் இராது. (நற்பாக்கியம்) முற்றாக (உங்களுக்கு) தடுக்கப்பட்டு விட்டது என்று அந்த மலக்குகள் கூறுவார்கள்.’

அல்குர்ஆன் 25 : 21, 22

جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

14

## படைத்த இறைவனின் ஆற்றலையே நம்ப மறுப்பவர்கள்

"நாம் பூமியில் அழிந்து போய் விடுவோமாயின் மெய்யாகவே நாங்கள் புதிய படைப்பாவோமா?" எனவும் அவர்கள் கூறுகின்றனர். ஏனெனில் அவர்கள் தங்கள் இறைவனைச் சந்திப்பதையே நிராகரிப்போராய் இருக்கிறார்கள்.

அல்குர்ஆன் 32 : 10

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

15

## இறை அருளின் மீது நம்பிக்கை இழந்தவர்கள்

இன்னும், எவர் அல்லாஹ்வின் வசனங்களையும், அவனைச் சந்திப்பதையும் நிராகரித்தார்களோ, அவர்கள் தாம் என் ரஹ்மத்தை விட்டு நிராசையானவர்கள், மேலும், இ(த்தகைய)வர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு.

அல்குர்ஆன் 29 : 23

## செயலுக்கு ஏற்ப கூலி

எனவே அவர்கள் நம் வசனங்களை நிராகரித்து இந்த இறுதி நாளின் சந்திப்பை மறந்து விட்டது போன்று, இன்று நாம் அவர்களை மறந்து விடுகிறோம்.

அல்குர்ஆன் 7 : 51

# அல்லாஹ்வைத் தரிசிப்பதை விரும்புபவர்களும், வெறுப்பவர்களும்

17

## படைத்த இறைவனுக்கே நன்றி கெட்ட அதிக மனிதர்களின் நிலை இதுதான்

அவர்கள் தங்களுக்குள்ளே (இது பற்றிச்) சிந்தித்துப் பார்க்க வேண்டாமா? அல்லாஹ் வானங்களையும், பூமியையும், இவ்விரண்டிற்கு மிடையிலுள்ளவற்றையும், உண்மையையும், குறிப்பிட்ட தவணையையும் கொண்டல்லாமல் படைக்கவில்லை. எனினும் நிச்சயமாக மனிதர்களில் பெரும்பாலோர் தங்கள் இறைவன் சந்திப்பை நிராகரிக்கிறார்கள்.

அல்குர்ஆன் 30 : 8